**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**அறிவித்தல்**

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி : பொறியியலாளர் (சிவில்) – MLM1**
**பொறியியலாளர் (மின்சாரம் மற்றும் மின்னனு) – MLM1**
**பொறியியலாளர் (கடலக / இயந்திரம்) – MLM1**

**(அ) தகுதித்திறன்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பொறியியல் விஞ்ஞானப் (சிவில், மின்சாரம் மற்றும் மின்னனு, கடலக / இயந்திரம்) பட்டமொன்று அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட அதற்குச் சமனான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**(ஆ) சம்பளம் :**

| | |
|---|---|
| சம்பள வகையீடு | : 4:1 (MLM1) |
| ஆரம்பச் சம்பளம் | : ரூ. 92,650 /= |
| வருடாந்த சம்பள ஏற்றம் | : ரூ. 1.725 /= |

கொடுப்பனவுகள் அடங்கலாக மாத மொத்தச் சம்பளம் ரூ. 185,000 /= அளவினதாக இருக்கும்.

**குறிப்பு:** பொறியியலாளர் பதவி தொடர்பில் பொறியியல் சார்ந்த (A Eng) வகையீடு அல்லது அதற்கு மேற்பட்ட வகையீட்டின் கீழ் இலங்கை பொறியியல் கவுன்சிலில் (ECSL) பதிவு கட்டாயமாகும்.

**வயதெல்லை :** 45 வயதை விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச சேவை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்), மனிதவளம் மற்றும் நிருவாகப் பகுதி – நிறைவேற்றுப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13"** என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக **2026.10.12** ஆம் திகதிக்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED